## தமிழ்நாடு அரசு

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய வரலாறு மற்றும் கலாச்சாரம்

பகுதி : **விஜயநகர மற்றும் பாமினி அரசுகள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள்வடிவில்தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக்குறிப்புகளுக்கானகாப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# விஜயநகர மற்றும் பாமினி அரசுகள்

## நான்கு மரபுகள்

| மரபு | ஆண்டு | நிறுவனர் |
|---|---|---|
| • சங்கம மரபு | கி.பி. 1336-1485 | ஹரிஹரர் மற்றும் புக்கர் |
| • சாளுவ மரபு | கி.பி. 1486-1505 | சாளுவ நரசிம்மன் |
| • துளுவ மரபு | கி.பி. 1505-1565 | வீர நரசிம்மன் |
| • அரவீடு மரபு | கி.பி. 1565-1672 | திருமலை |

## அரசியல் வரலாறு

- சங்கம மரபைச் சேர்ந்த ஹரிஹரரும், புக்கரும் 1336-ஆம் ஆண்டு விஜய நகரத்தை நிறுவினார்.
- அவர்கள் வாரங்கல் ஆட்சியாளர்களான காகதீயர்களிடம் பணியாற்றி வந்தனர்.
- முஸ்லிம் படையெடுப்பாளர்களால் சிறைப்படுத்தப்பட்டு டெல்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டு இஸ்லாமிய சமயத்திற்கு மாற்றப்பட்டனர்.
- வித்யாரண்யர் என்பவரின் முயற்சியால் இந்து சமயத்திற்கு திரும்பினார்.
- தங்களது சுதந்திரத்தை அறிவித்துக் கொண்ட அவர்கள் துங்கபத்திரை நதியின் தென்கரையில் ஒரு புதிய நகரத்தை நிறுவினர். வெற்றி நகரம் என்ற பொருள் கொண்ட விஜயநகரம் என்று அது வழங்கப்பட்டது.

| அயல்நாட்டு பயணிகள் | நாடுகள் |
|---|---|
| இபன் பதூதா | மொரோக்கா |
| நிக்கோலோ - டி - கோண்டி | வெணிஸ் |
| அப்துல் ரசாக் | பாரசீகம் |
| போமிங்கோ பயஸ் | போர்ச்சுக்கீசியப் பயணி |

## ஹரிஹரர் (கி.பி.1336-1356)

- ஹோய்சள அரசர் வீழ்ச்சி, ஹரிஹரரும் புக்கரும் தங்களது அரசை விரிவு படுத்திக் கொள்வதற்கான முயற்சி களை எளிதாக்கியது.

தமிழ்நாடு அரசு
வாய்மையே வெல்லும்

- 1346-ஆம் ஆண்டுவாக்கில் ஹோய்சள அரசுப்பகுதி முழுவதும் அவர்களது கட்டுப்பாட்டில் வந்தது. கி.பி. 1347-ம் ஆண்டு கடம்பர்களின் பகுதிகளையும் இணைத்துக் கொண்டனர்.

## முதலாம் புக்கர் (கி.பி.1356-1377)

- பாமினி சுல்தான் முதலாம் முகமது ஷாவிடம் போரிட்டு தோல்வியுற்றார். பின்பு அவரிடம் அமைதி ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டார். துங்கபத்ரா தோ ஆப் முழுவதற்கும் சுல்தான் தலைவராக விளங்கினார்.
- இவரின் ஆட்சிக் காலத்தில் மதுரை சுல்தான் அரசு தனது மகன் குமார காம்பணரால் 1377-ல் வெற்றி கொள்ளப் பட்டது.
- குமார காம்பணரின் மதுரைப் படையெடுப்பு குறித்து மதுரா விஜயம் என்ற நூலில் விவரமாகக் கூறப் பட்டுள்ளது.
- விஜயநகர பேரரசுக்கும் பாமினி அரசுக்கு இடையிலான பூசல்கள் பலஆண்டுகள் நீடித்தது.
- இம்மோதலுக்கு மூன்று முக்கிய காரணங்கள்
  1. கிருஷ்ணா, துங்கபத்திரா நதிகளுக்கிடையிலான பகுதியான ரெய்ச்சூர் தோ ஆப் பகுதியை கட்டுப்படுத்துவதும்.
  2. கிருஷ்ணா கோதாவரி டெல்டாவின் வளமான நிலங்களைக் கைப்பற்று வதும் மற்றும் ஏராளமான துறை முகங்களைக் கைப்பற்றி அயல் நாட்டு வர்த்தக்ததை விரிவாக்குவது.
  3. மராத்தவாடா பகுதியில் கொங்கன் பகுதியை கைப்பற்றுவது.

## இரண்டாம் தேவராயர் (கி.பி.1422-1466)

- ஒரிசாவின் தலைநகரை தாக்கினார். மேலும் கேரளாவின் சில பகுதிகளை இணைத்துக் கொண்டார். கிருஷ்ணா துங்கபத்ரா தோ ஆப் மீது படை யெடுத்தார்.
- இராணிய துாதுவரான அப்துல் ரஸாக் இவரது அரசவைக்கு வருகை தந்தார்.
- சங்கம வம்சத்தின் சிறந்த அரசராகத் திகழ்ந்தார்.

## பிரபுதராயர் (கி.பி.1486)

- சங்கம வம்சத்தின் கடைசி அரசராவார்.

## சாளுவ மரபு

- சாளுவ நரசிம்மா (கி.பி. 1486-1490)
- இம்மரபை தோற்றுவித்தவர் ஆவார்.

## துளுவ மரபு

1. துளுவ நரச நாயகா-கி.பி. 1491-1503
2. வீர நரசிம்ம ராயர் -கி.பி. 1503-1509
3. கிருஷ்ண தேவராயர் -கி.பி. 1509-1529
4. அச்சுத தேவராயர்-கி.பி. 1529-1542
5. முதலாம் வேங்கடா- கி.பி. 1542
6. சதாசிவ ராயர்-கி.பி. 1542-1569

## கிருஷ்ண தேவராயர் (கி.பி.1509-1530)

- விஜய நகரத்தின் மிகச் சிறந்த பேரரசான கிருஷ்ண தேவராயர் துளுவ மரபைச் சேர்ந்தவர்.


கிருஷ்ண தேவராயர்

- படையெடுத்து வரும் பாமினி படைகளை தடுத்து நிறுத்துவதே அவரது அப்போதைய முதல் கடமையாக இருந்தது.
- அச்சமயம், பாமினி அரசு மறைந்து அங்கு தக்காண சுல்தானியங்கள் நிறுவப்பட்டிருந்தன.
- திவானி என்ற இடத்தில் நடைபெற்ற போரில் கிருஷ்ண தேவராயர் முஸ்லிம் படைகளை இறுதியாக முறியடித்தார்.
- இதனால், பீஜப்பூரின் சுல்தானுடன் மோதல் ஏற்பட்டது. அப்போது பீஜப்பூரின் சுல்தான் இஸ்மாயில் அடில் ஷா-வை கிருஷ்ண தேவராயர் முறியடித்து, 1520-இல் ரெய்ச்சூர் நகரைக் கைப்பற்றினார்.
- பின்னர், பீடார் மீது படையெடுத்து அதனையும் கைப்பற்றினார்.
- கிருஷ்ணதேவராயரின் ஒரிசா படை யெடுப்பும் வெற்றியில் முடிந்தது.
- கஜபதி மரபின் அரசரான பிரதாப ருத்ரனை அவர் முறியடித்து தெலுங்கானா பகுதி முழுவதையும் கைப்பற்றினார்.
- போர்ச்சுகீசியர்களுடன் அவர் நட்புறவையே மேற்கொண்டார். கிருஷ்ண தேவராயரின் அவைக்கு அல்புகர்க் தனது தூதுவர்களை அனுப்பிவைத்தார்.
- கிருஷ்ண தேவராயர் தாம் வைணவராக இருந்த போதிலும், அனைத்து சமயங்களையும் மதித்து நடந்தார்.
- கலை, இலக்கியப் புரவலாரகவும் அவர் திகழ்ந்தார். எனவே ஆந்திரபோஜர் என்று அவர் அழைக்கப்பட்டார்.
- அஷ்டதிக்கஜங்கள் என்ற எட்டு சிறந்த அறிஞர்கள் அவரது அவையை அலங்கரித்தனர். அவர்களாவன:

| எண் | அறிஞர்களின் பெயர் | நூல்கள் |
|---|---|---|
| 1. | அல்லசானி பெத்தண்ணா (ஆந்திர கவிதா பிதாமகர்) | மனுசரிதம்,ஹரிகதாசாரம் |
| 2. | நந்தி திம்மண்ணா | பாரிஜாதபஹரணம் |
| 3. | பட்டு மூர்த்தி | - |
| 4. | துராஜதி | காலஹஸ்தி மகாத்தியம் |
| 5. | புண வீர பத்ரா | - |
| 6. | பனாஜி சூரனா | இராகவ பாண்டவியம் |
| 7. | மல்லண்ணா | - |
| 8. | தெனாலிராமன் | பாண்டுரங்க மஹாத்யம் |

- அல்லசானி பெத்தண்ணா, ஆந்திர கவிதாபிதாமகர் என்று அவர் புகழப்பட்டார். அவரது முக்கிய படைப்புகள் மனுசரிதம் மற்றும் ஹரிகதாசாரம் என்பதாகும்.
- அமுக்தமால்யதம் என்ற தெலுங்கு மொழி நூலையும், ஜாம்பவதி கல்யாணம், உஷாபரிணயம் என்ற வடமொழி நூல்களையும் கிருஷ்ண தேவராயர் இயற்றியுள்ளார்.
- விஜயநகரத்தில் விட்டலசுவாமி மற்றும் ஹசரராமசாமி ஆலயங்களையும் அவர் எழுப்பினார். தனது பட்டத்தரசி நாகலாதேவியின் நினைவாக அவர் நாகலாபுரம் என்ற புதிய நகரை நிர்மானித்தார். கிருஷ்ண தேவராயரின் மறைவுக்குப் பின் அச்சுததேவர், வெங்கடர் ஆகியோர் அரியணையேறினார்.
- ராமராயரின் ஆட்சிக்காலத்தில், பீஜப்பூரின், அகமதுநகர், கோல்கொண்டா, பீடார் ஆகிய அரசுகளின் கூட்டுப் படைகள் 1565-ஆம் ஆண்டு தலைக்கோட்டைப் போரில் அவரை முறியடித்தன. விஜயநகரப் பேரரசுக்கு சாவு மணி அடித்த போராக இது கருதப்படுகிறது. இருப்பினும்,விஜயநகர அரசு ஆரவீடு மரபினரின் ஆட்சியில் அடுத்த நூறாண்டுகள் நிலைத்திருந்தது.

## ஆரவீடு மரபு

- திருமலை தேவராயர், ராமராராயரின் இளைய சகோதரர், இவர் உயிருடன் இருந்த படைத் தளபதி ஆவார்.
- இவர் ஏராளாமாள செல்வம் மற்றும் 1500 யானைகளுடன் விஜயநகரத்திலிருந்து பெனுகொண்டாவிற்கு இடம் பெயர்ந்தார்.
- திருமலை தேவராயரைத் தொடர்ந்து அவரது மகன் முதலாம் ஸ்ரீரங்கன் ஆட்சிக்கு வந்தார். இவர் சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த கடைசி விஜயநகரப் பேரரசர் ஆவார்.
- மூன்றாம் ஸ்ரீரங்கர் விஜயநகர அரசின் கடைசி ஆட்சியாளராவார்.
- இப்பேரரசை இறுதியாக பிஜப்பூர் மற்றும் கோல்கொண்டா சுல்தானியர்கள் கைப்பற்றிக் கொண்டனர்.

## ஆட்சி முறை

- விஜயநகரப் பேரரசின் கீழ் ஆட்சித்துறை நன்கு சீரமைக்கப்பட்டது. நிர்வாகம், நீதி, சட்டம் ஆகிய விவகாரங்களில் அரசர் முழு அதிகாரம் பெற்று விளங்கினார்.

**முக்கிய அமைச்சர்கள்**

| | | |
|---|---|---|
| பிரதானி | - | முதல் அமைச்சர் |
| தண்டநாயகா | - | கணக்கர் |
| முத்திரைகர்த்தா | - | நாணய அதிகாரி |
| மகாநாயக்கசரியர் | - | அரசர் இவரின் மேற்பார்வையில் கிராமங்களை கண்காணித்து வருகிறார். |
| செணதியோவா | - | கிராமகணக்கர் |
| கண்டச்சரியர் | - | இராணுவத்துறை |
| அத்தவாகனம் | - | நிலவருவாய் துறை |
| சிஸ்தி | - | நிலவரி |
| கடமை, இறை, வரி | - | வரி வகைகள் |

பேரரசு பல்வேறு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| மண்டலம்/இராஷ்டிரம் (மாகாணம்) | → | மண்டலேஸ்வரர்/நாயக் |
| நாடு (மாவட்டம்) | → | - |
| ஸ்தலம்( துணை-மாவட்டம்) | → | - |
| கிராமம் | → | கௌடா |

- விஜயநகர ஆட்சியாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆட்சியில் முழு அதிகாரங்களை வழங்கியிருந்தனர்.
- நிலவரி தவிர, திறைகள், பரிசுகள் ஆகியவற்றை சிற்றரசர்களும் படைத்தலைவர்களும் அவ்வப்போது பேரரசுக்கு அனுப்பி வந்தனர்.
- துறைமுகங்களில் வசூலிக்கப்பட்ட சுங்கம்,பல்வேறுதொழிலாளர்கள்மீதான வரிகள் ஆகியவையும் அரசாங்கத்தின் வருவாயாக இருந்தன.
- விளைச்சலில், ஆறில் ஒரு பங்கு நிலவரியாக வசூலிக்கப்பட்டது.
- குதிரைப்படை, காலாட்படை, பீரங்கிப் படை, யானைப்படை என நான்கு முக்கிய பிரிவுகளை அது கொண்டிருந்தது.
- ராணுவத்தின் உயர் அதிகாரிகள் ஆற்றும் பணிக்கு ஈடாக நிலங்கள் வழங்கப்பட்டன.
- இந்நிலங்கள் அமரம் என்று அழைக்கப்பட்டது. படை வீரர்களுக்கு ஊதியம் பொதுவாக பணமாகவே வழங்கப்பட்டது.

**சமூக வாழ்க்கை**

- அல்லசானி பெத்தண்ணா மனுசரிதம் என்னும் தனது நூலில் நான்கு முக்கிய ஜாதிகள் இருந்ததாகக் கூறியுள்ளார்.
- அடிமைகளை பற்றி நிக்கோலோ டி கோண்டி தனது குறிப்புகளில் கூறியுள்ளார்.
- சங்கம மரபினர் சைவர்களாகத் திகழ்ந்தனர். விருப்பாட்ஷர் அவர் களின் குலதெய்வம்.
- ஆனால், எல்லா அரசர்களும் பிற சமயங்கள் மீது சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டனர்.
- ஆலயங்களுக்கு சேவை செய்த நாட்டிய மகளிரும் இருந்தனர். தேவதாசி முறை நடைமுறையில் இருந்ததாக பயஸ் குறிப்பிட்டுள்ளார்.
- அரச குடும்பங்களில் பலதார மணம் வழக்கத்தில்இருந்தது. சதி வழக்கம் பெருமையாகக் கருதப்பட்டது. நூனிஸ் அதுபற்றி விவரமாகக் கூறியுள்ளார்.

**பொருளாதார நிலை**

- விஜயநகர ஆட்சியாளர்கள் வேளாண்மை வளர்ச்சிக்கு மேலும் ஊக்க மளித்தனர்.
- புதிய ஏரிகள் வெட்டப்பட்டன. துங்க பத்திரா போன்ற நதிகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டப்பட்டன.
- கர்நூல், அனந்தபூர் மாவட்டங்களில் வைரச் சுரங்கங்கள் இருந்தன.
- முக்கிய தங்க நாணயம் வராகன் என்பதாகும். ஆனால், எடைகளும் அளவைகளும் இடத்துக்கு இடம் மாறுபட்டிருந்தன.
- மலபார் கடற்கரையில் பல துறை முகங்கள் இருந்தன. அவற்றில் குறிப்பிடத்தக்கது கண்ணனூர் துறைமுகமாகும்.
- இரண்டாம் தேவராயர் ஆட்சியில் 300 துறைமுகங்கள் இருந்ததாக அப்துல் ரஸாக் கூறுகிறார்.
- அரேபிய, பாரசீகம், தென் ஆப்பிரிக்கா, போர்ச்சுக்கல் போன்ற மேலை நாடுகளுடனும் வாணிகத்தொடர்பு நிலவியது.
- பருத்தி மற்றும் பட்டுத் துணிகள், நறுமணப் பொருட்கள், அரிசி, வெடியுப்பு, சர்க்கரை போன்றவை முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள்.
- குதிரைகள்,முத்துக்கள்,செம்பு, பவழம், பாதரசம்,சீனத்துப்பட்டு,வெல்வெட் துணிகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. கப்பல் கட்டும் தொழிலும் வளர்ச்சியடைந்தது.

**பண்பாட்டு பங்களிப்பு**

- விஜய நகர ஆட்சியில் கோவில் கட்டும் நடவடிக்கைகள் மேலும் அதிகரித்தது.
- ராஜகோபுரங்கள் எனப்படும் நுழை வாயில் கோபுரங்கள் மற்றும் கோயில் வளாகங்களில் சிறப்புத் தூண்களைக் கொண்ட கல்யாண மண்டபங்கள் ஆகியன விஜயநகர கட்டிடக்கலையின் சிறப்பு அம்சமாகும்.
- பெரிய ஆலயங்களில் நூற்றுக்கால் மண்டபங்களும்,ஆயிரங்கால் மண்டபங் களும் எழுப்பப்பட்டன.
- விஜய நகர கோவில் கட்டிடக்கலையின் பிரமாண்டத்துக்கு எடுத்துக் காட்டாக காஞ்சிபுரத்திலுள்ள ஏகாம்பரநாதர் மற்றும் வரதராஜர் ஆலயங்களைக் கூறலாம்.
- திருப்பதியில் காணப்படும் கிருஷ்ண தேவராயர் மற்றும் அவரது அரசிகளின் உலோகப்படிமங்கள் விஜய நகர கால உலோகக்கலைக்கு எடுத்துக்காட்டாகும்.
- வடமொழி மற்றும் தெலுங்கு இலக்கியம் விஜய நகர காலத்தில் மகத்தான வளர்ச்சி பெற்றது. கிருஷ்ணதேவ ராயரின் ஆட்சிக்காலத்தில் இலக்கிய வளர்ச்சி உச்சம் பெற்றது.
- அவரது அவைப் புலவரான அல்லசானி பெத்தண்ணா தெலுங்கு இலக்கிய வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றி யுள்ளார்.

**பாமினி அரசு**

- 1347-ஆம் ஆண்டு பாமினி அரசை நிறுவியவர் அலாவுதீன் பாமன்ஷா அவர் ஹசன் கங்கு என்றும் அழைக்கப் பட்டார்.
- அதன் தலைநகரம் குல்பர்கா. இத் தலைநகர் ஆஷனாபாத் என பெயர் மாற்றப்பட்டது. பாமினி அரசை மொத்தம் பதினான்கு (14) சுல்தான்கள் ஆட்சி புரிந்தனர்.

**பெரோஷா பாமினி (கி.பி.1397-1422)**

- இரண்டாம் முகமது ஷா இறந்த பிறகு ஆட்சிக்கு வந்தார்.

- இவர் சிறந்த தளபதி. இவர் விஜய நகரத்தின் முதலாம் தேவராயாவைத் தோற்கடித்தார். மேலும், அவரது மகளைத் திருமணம் செய்துக் கொண்டார்.
- இவர் சமய அறிவியல் மற்றும் இயற்கை அறிவியலில் புகழ்பெற்று விளங்கினார். உதாரணமாக, தாவரவியல், வடிவியல் மற்றும் தர்க்க சாஸ்திரம்.
- இவர் ஒரு அழகிய கையெழுத்துக் கலைஞர் மற்றும் சிறந்த கவிஞராவார்.

## அகமது வாலிஷா (கி.பி.1422-1435)

- பெரோஷா பாமினியைத் தொடர்ந்த ஆட்சிக்கு வந்தவர். இவர் கொடூரமான மற்றும் கருணையற்ற ஆட்சியாளராகத் திகழ்ந்தார்.


அகமது ஷா

- இவர் வாராங்கல் அரசை வெற்றி கொண்டார் மற்றும் தனது தலைநகரை குல்பர்காவிலிருந்து பிடாருக்கு மாற்றினார்.
- இவர் 1435-ல் இறந்தார்.
- மூன்றாம் முகம்மதுஷாவின் ஆட்சிக் காலத்தில் பாமினி அரசின் புகழ் அதன் உச்சிக்கு சென்றது.
- முகமது ஷாவின் வெற்றிக்கு முக்கிய காரணம் அவரது அமைச்சராக விளங்கிய முகமது காவன் என்பவரின் ஆலோசனைகளும் சேவைகளுமே யாகும்.

## முகமது காவன்

- அவர் ஒரு பாரசீக வணிகர்.
- இவருக்கு "வணிகர்களின் தலைவன்" (மாலிக்-உல்-துஜ்ஜார்) என்ற பட்டத்தை சுல்தான் வழங்கினார்.
- முகமது காவனின் மறைவுக்குப்பின் பாமினி அரசு வீழ்ச்சியடையத் தொடங்கியது.
- முகமதுஷாவிற்க்குப், பிறகு திறமையற்ற சுல்தான்கள் ஆட்சிக்கு வந்தனர். இக்காலத்தில்ல மாகாண ஆளுநர்கள் தங்களது சுதந்திரத்தை அறிவித்துக் கொண்டனர்.
- 1526-ஆம் ஆண்டு வாக்கில் பாமினி அரசு ஐந்து சுதந்திர சுல்தானியங்களாக சிதறுண்டன. அகமது நகர், பீஜப்பூர், பீரார், கோல்கொண்டா, பீடார் என்ற ஐந்தும் தக்கான சுல்தானியங்கள் என்று அழைக்கப்பட்டன.

### நிர்வாகம்

- சுல்தானியர்கள் நிலமானிய முறை நிர்வாகத்தினையே கடை பிடித்தனர்.
- அரசானது பல்வேறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. இதற்கு தாரபுகள் என்று பெயர்.
- ஒவ்வொரு தாரபும் ஆளுநரின் கீழ் இருந்தது. இவர்கள் தாரதர்கள் அல்லாத அமீர் என்று அழைக்கப்பட்டனர்.
- கல்வி, கலை மற்றும் கட்டிடக் கலைக்குப் பங்களிப்பு
- பாமினி சுல்தான்கள் கல்விக்குப் பெரிய அளவு கவனம் செலுத்தினர்.
- அரபி மற்றும் பாரசீக மொழி கற்றலை ஊக்குவித்தனர்.

## சுல்தான்கள் கட்டிய மிகப் புகழ் வாய்ந்த நினைவுச் சின்னங்களாவன:

1. குல்பர்காவிலுள்ள ஜும்மா மசூதி
2. கோல்கொண்டா கோட்டை
3. பீஜப்பூரில் உள்ள கோல்கும்பாஸ் மற்றும்
4. முகமது காவனின் மதரஸாக்கள் முதலியவை.

| அரசுகள் | மரபு | நிறுவனர் |
|---|---|---|
| அகமது நகர் | நிஜாம் ஷாகி | மாலிக் அகமது |
| பீஜப்பூர் | அடில் ஷாகி | யூசுப் அடில்ஷா |
| பீரர் | இமாட் ஷாகி | இமாட் ஷா |
| கோல்கொண்டா | குதுப் ஷாகி | குலிக் குதுப் ஷா |
| பீடார் | பரிட் ஷாகி | அமீர் அலி பரிட |